


# தாமதித்து பேசும் ஓடிசம் குழந்தைகள்

அத்தியாயம் 03

## Verbal and Nonverbal Communications

ஓடிசம் குழந்தைகளின் பேச்சுத் திறன் மிகவும் குறைவாகவே காணப்படும். கூடுதலான பிள்ளைகள் பேச்சு இல்லாது ஊமை போன்றே காணப்படுவர். இவர்கள் கதைப்பதற்கு முயற்சி எடுக்க மாட்டார்கள். அதாவது ஒரு சாதாரண குழந்தையை எடுத்துக் கொண்டால் அவர்கள் முதலில் ஏதாவது சத்தங்களை உருவாக்கி சிறிது சிறிதாக சொற்களை சொல்வதற்கு எத்தணிப்பார்கள்.

ஆனால் ஓடிசம் குழந்தைகள் அவ்வாறு சத்தங்களை உருவாக்கி பேசுவதற்கு எத்தணிக்கவே மாட்டார்கள். சில ஓடிசம் குழந்தைகளில் பேச்சு ஆற்றல் சாதாரண குழந்தைகளை போன்றே உருவாகி சில மாதங்களின் பின் திடீர் என்று அந்த பேசும் ஆற்றல் இல்லாது போகின்றது. (Speech Lost) அதே நேரம் வேறு சில ஓடிசம் குழந்தைகளை எடுத்துக்கொண்டால் அவர்களிடம் பேசும்



Dr. எஸ்.தேவாநந்தன் (Chairman, OSILMO Autism Center)

ஆற்றல் காணப்படும். ஆனால் அவர்கள் பேசுவது யாருக்குமே விளங்காது. அதாவது அவர்கள் தங்களுக்கு என்றே ஒரு விதமான பாசையை உருவாக்கிப் பேசுவார்கள். சில வேளைகளில் தனிமையில் இருந்து கதைத்து கொண்டு இருப்பார்கள்.

கூடுதலான ஓடிசம் குழந்தைகள் மிகவும் தாமதமாக பேச ஆரம்பிப்பார்கள். அவ்வாறு பேசும் போதும் இவர்களால் கிரகித்து பேச முடியாத தன்மை காணப்படும். வசனங்களை உருவாக்கி தொடர்ந்து பேச முடியாத தன்மை காணப்படும்.

இவர்கள் காதுக்கு கேட்கும் சொற்களை அல்லது வசனங்களை திரும்ப சொல்வார்கள் (Echolalia) உதாரணமாக ஏதாவது கேள்வி கேட்டால் அதற்கு பதில் சொல்லாது கேட்ட கேள்வியையே திரும்பச் சொல்வார்கள். அல்லது நாம் ஏதாவது சொன்னால் இவர்களும் அதை திரும்ப (Repeat) சொல்வார்கள். Echolalia இரண்டு வகையில் குறிப்பிடலாம்.

## Immediate Echolalia

யாராவது இவர்களிற்கு ஏதாவது கூறினால்



அதனை உடனடியாக திரும்ப சொல்லுதல். உதாரணமாக காலையில் என்ன சாப்பிட்டீர்கள் என்று கேட்டால், இவர்கள் அதற்கு பதில் சொல்லாது உடனடியாக காலையில் என்ன சாப்பிட்டீர்கள்? என்று சொல்வார்கள். அதே போன்று ''தம்பி மேசை மேல் புத்தகம் இருக்கிறது''என்று சொன்னால் இவர்களும் அதனை திரும்பச் சொல்வார்கள்.

## Delayed Echolalia

இன்று சொன்ன விடயத்தை திரும்ப மறு நாள் அல்லது சில நாட்களாக திரும்பத் திரும்ப சொல்லி கொண்டே இருப்பார்கள். (Stereotyped and Repetitive use of of Language.)

உதாரணமாக தம்பி மேசை மேல் புத்தகம் இருக்கிறது என்ற வசனத்தை திரும்பத் திரும்ப சொல்லி கொண்டே இருப்பார்கள்.

ஓடிசத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு விடயத்தை கூறும் போது அதை புரிந்து கொள்ளும் தன்மை மிகவும் குறைவாகவே காணப்படும். அதே நேரம் மற்றவர்கள் கதைத்து கொண்டு இருக்கும் போது அதை பொறுமையாக பார்த்துக் கொண்டு இருக்கவோ புரிந்து கொள்ளவோ மாட்டார்கள்.

இவர்கள் ஏதோ ஒரு உலகத்தில் தங்களை தாங்கள் தூண்டும் (Self stimulation) செயற்பாடுகளில்



ஈடுபடுவர் அல்லது கதைத்து கொண்டு இருப்பவர்களை குழப்ப முற்படுவர்.

தங்களை தூண்டும் செயற்பாடு என்று சொல்லும் போது உதாரணமாக இப்பிள்ளைகள் துள்ளிக் கொண்டு இருப்பார்கள். பிள்ளைகள் துள்ளுவது வழமை.

ஆனால் சாதாரண பிள்ளை ஒன்றை எடுத்தால் சிறுது நேரம் விளையாட்டிற்கு துள்ளி விட்டு நிறுத்தி விடுவார்கள். ஆனால் ஓடிசம் பிள்ளைகள் அர்த்தம் இல்லாது தொடர்ந்து துள்ளி மகிழ்வார்கள். இவ்வாறு பல விதமான Self stimulation செயற்பாடுகளில் ஈடுபடுவர்.

ஓடிசம் பிள்ளைகள் கை பாசையையே கூடுதலாக மேற்கொள்வர். இவர்களிற்கு ஏதாவது பொருள் தேவை என்றாலோ அல்லது ஒரு வீட்டில் இருந்து வெளியே செல்ல வேண்டும் என்றால்



கையை காட்டி அதனை சொல்ல முற்படுவர்.

உதாரணமாக இவர்களிற்கு தண்ணீர் குடிக்க வேண்டும் என்று கேட்காது தாயின் கையை அல்லது அந்த இடத்தில் இருப்பவர்களின் கையை பிடித்து சென்று காண்பிப்பார்கள். ஆனால் சில வேளைகளில் தண்ணீர் உடன் வேறு பொருட்களும் இருக்குமாயின் இவர்கள் காண்பிப்பதை புரிந்து கொள்வது மிகவும் கஸ்டமாக இருக்கும்.பெற்றோர் இந்த இடத்தில் மிகவும் வேதனைக்கு உள்ளாகின்றனர். தனது பிள்ளை பசி வந்தால் பசிக்குது என்று கூட கூறுகிறார் இல்லை என்று மன வேதனைப்படுகின்றார்கள்.

மேலும் இப் பிள்ளைகள் மலசலம் வந்தால் கூட கூற முடியாத நிலைமை காணப்படுகின்றது. கூடுதலான பெற்றோர் இப்பிள்ளைகளிற்கு பம்பேஸ் பயன்படுத்துவதை பழக்கத்தில் கொண்டுள்ளார்கள். ஆனால் இப் பிள்ளைகளிற்கு தகுந்த பயிற்சிகளை வழங்குவதன் மூலம் இவ்வாறான பிரச்சினைகள் நாளடைவில் இல்லாது போகக் கூடிய சாத்தி





யக் கூறுகள் உண்டு.

ஓடிசம் பிள்ளைகள் தாங்கள் நினைப்பதை கூற முடியாததன் காரணத்தினால் கூடுதலாக கோபப்படுவார்கள். கோபம் வரும் போது பல விதமான செயற்பாடுகளில் ஈடுபடுவர். உதாரணமாக மற்றவர்களுக்கு அடித்தல், பொருட்களை எடுத்து வீசுதல், மிகவும் பெரிய சத்தமாக கத்துதல் போன்றன காணப்படும். இங்கு முக்கியமான விடயம் சாதாரண பிள்ளைகளிற்கும் கோபம் வந்தால் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவர். ஆனால் சிறுது நேரத்தில் அதனை மறந்து சாதாரண நிலைமைக்கு திரும்புவர். ஆனால் ஓடிசம் பிள்ளைகள் அவ்வாறு இல்லை.

ஆனால் சில ஓடிசம் பிள்ளைகள் கோபம் வரும் போது தங்களை தாங்களை தாக்குவார்கள் (Self Injured) உதாரணமாக தங்கள் கைகளை கடித்தல், தலையை நிலத்தில் அடித்தல் அல்லது சுவரில் இடித்தல், தாங்களே துள்ளுதல் அடித்தல் போன்றன காணப்படும்.

இவர்களிடம் மிகவும் பிடிவாதம் காணப்படும். ஏதாவது ஒன்று தேவை என்றால் நிச்சயமாக அதை வேண்டிக் கொடுத்தே ஆக வேண்டும். அதே போன்று உதாரணத்திற்கு இன்று மாலை Parkஇற்கு விளையாட செல்வோம் என்று சொன்னால் நிச்சயமாக போயே ஆக வேண்டும். தற்செயலாக போக முடியாது போனால் வீடு இரண்டாகி விடும்.

(தொடரும்...)